## 158. சரணம் சரணம் இயேசப்பா

### பல்லவி

சரணம் சரணம் இயேசப்பா சரணம் சரணம்
நீர் வரனும் வரனும்
என் வாழ்வில் வரனும் வரனும்
சரணம் சரணம் இயேசப்பா சரணம் சரணம்
நீர் தரனும் தரனும்
என் வாழ்வில் கிருபை தரனும்

### சரணங்கள்

1. பைத்தியம் என்று என்னை தள்ளாமல்
ஞானமான தேவன் என்னில் வந்தீரே
- சரணம் சரணம்

2. பெலவீனன் என்று என்னை தள்ளாமல்
பெலனான தேவன் என்னில் வந்தீரே
- சரணம் சரணம்

3. அற்பமானவன் என்று என்னை தள்ளாமல்
அற்புத தேவன் என்னில் வந்தீரே
- சரணம் சரணம்

4. கனவீனன் என்று என்னை தள்ளாமல்
கனமான தேவன் என்னில் வந்தீரே
- சரணம் சரணம்